[21st July 1964

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : கூட்டுறவு சொசைடிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஆந்திராவில் இருந்து நெல்லூர் அரிசி வாங்கி விற்கிருர்கள்.

Rice procurement

* 588 Q.—Sri M. KALYANASUNDARAM, Sri T. P. ALAGAMUTHU : Will the Hon Minister for Food be pleased to state—

(*a*) the details of the modified scheme of procurement of rice and paddy in the State for the year 1963–64;

(*b*) the target fixed for building up the stock in the State and the actual quantity procured in each district in 1962 and 1963; and

(*c*) whether samples of rice procured would be kept in the Legislature Library for inspection by the Members?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ)—(உ) சபையில் ஓர் அறிக்கை a வைக்கப்பட்டுள்ளது.

* 589 கேள்வி.—திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி, திரு. ப. உ. சண்முகம் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) ராஜ்யத்தில் இதுவரையில் கொள்முதல் செய்யப் பட்டுள்ள நெல் எவ்வளவு டன் ?

(இ) கொள்முதல் செய்ய கடைபிடிக்கும் கொள்கை என்ன? கொள்முதல் விலை மூட்டைக்கு எவ்வளவு ?

(உ) கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி மத்திய சர்க்காரி டம் கருத்து தெரிவிக்கப்பட்டதா? அப்படியாயின் அதன் விவர மென்ன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :

(அ), (இ), (உ) : 8-1-1964 முதல் 27-6-1964 வரை அமுலில் இருந்த கட்டாய கொள்முதல் திட்டத்தின் கீழ் அரிசி மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. நெல் அல்ல. அரிசி மில் சொந்தக் காரர்களிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்தும் மட்டுமே அரிசிக் கொள்முதல் செய்யப்படவேண்டும் என்பதே அரசாங்கத்தின் கொள்கையாயிருந்தது. ஆனுல் அதே நேரத்தில் நெல் உற்பத்தி யாளர்கள் அவர்களாகவே கொடுத்தால் அந்த நெல்லைக் கொள் முதல் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு அரிசிக் கொள்முதல் விலையிலிருந்து நெல்லைத் தீட்டுவதற்கும் மற்றத் தொடர்பான செலவுகட்கும் ஆகும் கட்டணங்களைக் கழித்துக்கொண்டு விலை கொடுக்கப் பட்டது. உற்பத்தியாளர்களுக்கு நியாயமான குறைந்த அளவு விலையை நிர்ணயிப்பதும், வியாபாரிகள் அரிசிக் கொள்முதல் விலை களைக் காட்டி நெல் கொள்முதல் விலைகளை அதிகமாய் குறைந்து

a 532–534-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

21st July 1964]

விடாமல் செய்வதும்தான் இதன் நோக்கமாகும். மதுரை மாவட்டத்திலுள்ள ஓர் உற்பத்தியாளரிடமிருந்து 30 மூட்டை நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மாநில அரசாங்கத்தின் முறையீட்டின் மேல், இந்திய அரசாங்கம் 23-3-1964-லிருந்து அரிசிக் கொள்முதல் விலையை மணங்கு ஒன்றுக்கு 2 ரூபாய் அல்லது குவின்டால் ஒன்றுக்கு ரூ. 5.36-ஆக உயர்த்தியுள்ளது. 27-6-1964 முதல் இந்தக் கொள்முதல் திட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டது.

*590 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய எத்தனை டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது?

(இ) வியாபாரிகள் மூலம் எத்தனை டன்? கூட்டுறவு சங்கங்கள் மூலம் எத்தனை டன்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) 1963-ல் நிர்பந்தமற்ற அரிசிக் கொள்முதல் செய்யும் திட்டம் நமது மாநிலத்தில் அமலில் இருந்தது. இந்தத் திட்டத்திற்குப் பதிலாக, 8-1-1964 முதல் சட்டபூர்வமான கொள்முதல் திட்டம் அமலுக்கு வந்தது. 7-1-1964 வரையில் நிர்பந்தமற்ற கொள்முதல் திட்டத்தின்கீழ், மொத்தம் 50,800 டன் கொள்முதல் செய்யப்பட்டது. 8-1-1964 முதல் 29-2-1964 வரையில் சட்ட பூர்வமான கொள்முதல் திட்டப்படி 18,337 டன் கொள்முதல் செய்யப்பட்டது.

(இ) வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்தது எவ்வளவு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்தது எவ்வளவு என்பதற்கு உடனடியாகத் தகவல் ஏதும் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் அமைச்சர் அவர்கள், விவசாயிகள் ஒரு நியாய விலை பெறுவதற்கும், வியாபாரிகள் அதிகமான அளவில் விலையை உயர்த்தி விடாமல் இருப்பதற்கும் கொள்முதல் திட்டம் மேற்கொள்ளப்பட்டது என்று சொன்னார்கள். அந்தக் கொள்கையில் சர்க்கார் எந்த அளவுக்கு வெற்றியடைந்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொல்வார்களா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: லட்சம் டன் கொள்முதல் செய்யவேண்டுமென்று திட்டமிட்டதில் 71,000 டன் வரை கொள்முதல் செய்திருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கொள்முதல் திட்டம் கட்டாயமாக இருந்தாலும் சரி, நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்தாலும் சரி திட்டம் இப்போது அடியோடு கைவிடப்பட்டது. விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்கவும், அரிசி நியாயமான விலைக்கு விற்கப்பட வேண்டுமென்றும் திட்டமிடப்பட்ட அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட மாற்று நடவடிக்கைகள் என்ன?